### மூடரிவரெனல்.

தையலரை யதிகபரி காசங்கள் செய்ததிற்
சூழ்வுபெறு மூடர் சிலராம்
சகலர்க்கு மாகா தெனச்சொலிப் பின்பதைத்
தான்செய்யு மூடர் சிலராம்
வெய்யதன் மனையவட் சஞ்சிகல் விருந்ததனை
விட்டுண்ணு மூடர் சிலராம்
வேடிக்கை யாகவே கூடிவிளை யாடிவினை
விளைவிக்கு மூடர் சிலராம்
தூய்யசற புடைமாதை யெண்ணாம லொருபழுது
சொல்கின்ற மூடர் சிலராம்
சொல்லரிய தாய்தந்தை குருவெனினு மெண்ணாது
சோர [illegible] ராய் சொலலவியே
கைகண்ட முழுமூட ருங்கிநத நிமூடர்
சான்மூட ரனைமூடர் சாண்
கங்கா குலனசுப மணியன்மன மகலாத
கருணா லயச் செல்வியே. (௬௮)

### பதராவரி வரெனல்.

எங்கேர முந்தனை யேபுசழ்ந தேதிரியு
மேறுபோல் வாரொரு பதர்
இயல்பான தன்*கிரக சித்திரமதை வெளிதனி
லெடுத்துரைப பாரொரு பதர்
பனைதுறு மேபழகி னலுமோ விசுவாச
பாதகம விடாரொரு பதர்
பாருலகி லெல்லாரு முணவெனப நிலையெனப்
†பகிடிசொல் வாரொரு பதர்
சொன்றுலு மறியாது சுயபுத்தி யில்லாது
சோறுதின பாரொரு பதர்
துணைபத்தி யில்லாம லனைபததி னுறவாடி
சூழ்சேட னவரொரு பதர்
கன்னேரு மியபதர்கள சோறிட்ட வீட்டினிற்
களவுசெய் பதர்க்கு நிகரோ
கங்கா குலனசுப்ர மணியன்மன மகலாத
கருணா லயச செல்வியே. (௬௯)

### இவற்றி னருமை யிப்பொழுது தோன்று மெனல்.

வளமைமிகு விதரணத் தருமையது லுத்தர்பால்
மருவுற்ற போது தோன்றும்
வாலவய தருமைவிர்த் தாப்பிய மூதிர்ச்சிதான்
வந்துற்ற போது தோன்றும்
விழையுநிழ லருமைசுடு வெய்யிலி னடந்துதான்
வெயர்வுற்ற போது தோன்றும்
விரைநறுந் தண்ணீரி னருமையது தாகமிக
மேவுற்ற போது தோன்றும்

*கிரகசித்திரம்—வீட்டி லுண்டாய நிமை. †பகிடி—பரிகாசம்.

MAHAMAHOPADHYAYA Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY THIRUVANMIYUR, MADRAS-41



## துர்ச்சனர்களுக்குச் செல்வம் வந்தால் மிகவுந்தீச்செயல் செய்வாரெனல்.

பொல்லாத துர்ச்சனர்க டங்களுக் குலகிற்
　　பொருட்செல்வ மெய்தி விடிலோ
பொறுமையுள பெரியோர்சொ லென்னதென்று கேட்டிடார்
　　போத வாங்கார முறுவார்
அல்லாது கல்வியின் விகற்பமது வாய்த்திடி
　　லவைக்கு ணல்லோர் பாடலுக்
காணுது மோர்பழுது தேடியவ மானமுற
　　வாக்குவோ மென நோக்குவார்
இல்லாமன் மெல்லறிவு கூர்மையுறி லோசபை
　　யிடத்தில்வெவ் வினைய மதையே
யிசையா திசைத்துவிவ காரஞ்செய்வார் துட்ட
　　ரென்பவ ரியற்கை யீதாங்
கல்லாலி னிழலினினி துறைபரம சிவனையே
　　காதலிக் கின்ற மயிலே
கங்கா குலன்சுப்ர மணியன்மன மகலாத
　　கருணை லயச் செல்வியே. (௭௧)

## மாந்தர்களுக்கு மேன்மையானவை யிவையெனல்.

கிளரறிவி னுண்மிக் குயர்ந்தமூ துணர்வினோர்
　　கேண்மையே கேண்மை கயிலைக்
கிரிநாய கன்றிருக் கூட்டமே கூட்டங்
　　கிடைக்கொணு வமுதென வுளத்
தளர்வெலா நீக்குமதி மதுரக்வி வாணர்சற்
　　சங்கமே சங்க மென்றுந்
தன்பா லிரந்தவர்க் கில்லையென் றுரையாத
　　தயவே தயா வுடம்பின்
னிழலெனத் தனைவந் தடைந்தவர்க் கைவிடா
　　நிலைமையே நிலைமை மேன்மை
நெஞ்சவர்க் கொருவழிசொ னீர்மையே நீர்மையா
　　நிகரிலாட் *பொற்சி லம்பைக்
களவுகொள வுன்னினோன் கதிபெற வரந்தந்த
　　கவுரியே பாகை நகர்வாழ்
கங்கா குலன்சுப்ர மணியன்மன மகலாத
　　கருணை லயச் செல்வியே (௭௨)

---

*பொற் சிலம்பைக் களவு செய்ய நினைந்தவன் கதி பெற்ற கதை அவிநாசிப் புராணம் சங்கன்னச் சருக்கத்தாலுணர்க.

